1979 ஏப்ரல் 9]

திரு. சி. கோவிந்தராசன்; பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிரந்தரமான கழகம். நிரந்தரமாக அதற்கு வேலைகள் உண்டு. அந்த நிரந்தர வேலைகளைச் செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக வேலை செய்யும் அளவிற்கு, அவர்களுக்கு வேலை கொடுத்து, இந்த அரசே — கான்ட்ராக்ட் முறையைத் தவிர்த்து — கூலி குறைவாகக் கொடுப்பதை அனுமதிக்காது. அவர்களை நிரந்தரப்படுத்தி, நிரந்தரக் கூலிகளாக அமர்த்த ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்; பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் நிரந்தரமான கழகம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் ஏற்றுவது இறக்குவது போன்ற வேலைகளை நிச்சயமாக நிரந்தரமான வேலைகள் என்று சொல்ல முடியாது. நான் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இறக்குமதி செய்கிற வேலை அறுவடை காலத்தில் அந்தக் கிட்டங்கிகளில் இருக்க முடியும். வெளியிலே செல்வதற்கு லாரியில் அரிசி ஏற்றிக்கொண்டு செல்கிற வேலை வெளியிலே வியாபாரம் அதிகமாக நம்முடைய கிட்டங்கிகளில் இருக்கிற நேரத்தில்தான் நாம் செய்ய முடியும். நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நம்முடைய உணவுக் கிட்டங்கிகளில் விற்பனை அதிகம் இல்லாத காரணத்தால், அதிகமான அரிசி வெளியே போவது இல்லை. குறைந்து இருக்கிறது. ஆகவே ஏற்றுமதி, இறக்குமதி வேலைகள் நிரந்தரம் என்று சொல்வதற்கு இல்லை.

*வினா எண். 665— திரு. ஒ. சோ. வேலுச்சாமி; மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தின் தமிழ்நாடு அரசு சிவில்சப்ளைஸ் கார்ப்பரேஷன் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலியாக 1-5-76 முதல் 31-3-78 முடிய உள்ள காலத்திற்கு டன்னுக்கு ரூ. 2.80 பைசா வீதம் தனியார் வியாபாரிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்டதா ?

(ஆ) 1-5-76 முதல் 31-3-78 முடிய வேலை செய்த சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு 1 டன்னுக்கு ரூ. 2.80-க்கும் குறைந்த தொகை கூலியாகக் கொடுக்கப்பட்டதா ?

(இ) பாக்கி கூலித் தொகையை சுமைதூக்கும் தொழிலாளர்கள் தங்களுக்கு கொடுக்க வற்புறுத்துகிறார்களா ?

(ஈ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) இல்லை. ஆனால் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், ஆஸ்பத்திரி முதலிய நிறுவனங்களிடமிருந்தும், ஏற்றுக்கூலி இறக்குக் கூலியாக ரூ. 2.10-ம் எடைக்கூலியாக 70 பைசாவும் வசூலிக்கப்பட்டது.

(ஆ) ஆம். ஏற்கனவே அவர்கள் டெண்டரில் குறிப்பிட்டுள்ளபடியும் நாளுக்கு நாள் கூலி விகிதங்கள் அவ்வப்போது உயர்த்தப்பட்டு இவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் உள்ளது. எனவே கொடுக்கப்பட்ட கூலி விகிதங்கள் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட விகிதங்களைவிடக் குறைவானதல்ல.

(இ) ஆம். இது மதுரை தொழிலாளர் நல ஆணையரிடம் விசாரணையில் உள்ளது.

(ஈ) தொழிலாளர் துறை ஆணையர், மதுரை முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, 1-5-76-க்கு முன்னால் டன்னுக்கு கூலி ரூ. 3.10 ஆக இருந்தது. இப்போது 1-4-78-ல் அதற்கு ரூ. 2.80. இடைப்பட்ட காலத்தில் ரூபாய் 1.20, 1.60 என்று இருந்தது. அதற்கும் ரூ. 2.80 கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; தலைவரவர்களே. நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். இந்தப் பிரச்சனை மதுரை தொழிலாளர் நல ஆணையரின் விசாரணையில் இருப்பதால் இப்போது அதுபற்றி எந்தவிதமான முடிவும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

திரு. தே. ஞானசிகாமணி ; தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர்கள் நீண்ட நாட்களாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் இந்தக் கூலி கொடுக்க வேண்டுமென்று சத்தியாகிரகம் இருந்தது அரசுக்குத் தெரியுமா? $2\frac{1}{2}$ ரூபாய்தான் கூலி கொடுத்திருக்கிறார்கள். காண்ட்ராக்டர்கள் தான் அவர்களுக்கு உரிய கூலி கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, எஞ்சியுள்ள கூலியை உடனடியாகக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; தலைவரவர்களே, எஞ்சியுள்ள கூலியைக் கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைப்பற்றி இப்போது பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். ஏனென்றால் இப்போது 'லேபர் கன்சிலியேஷன்' தொழிலாளர் நல ஆணையரின் விசாரணையில் இருக்கிறது. அதிகாரிகள் ஏதாவது தவறு செய்திருக்கிறார்கள்

1979 ஏப்ரல் 9]

என்று தெரிந்தால், கேள்விப்பட்டதைச் சொல்வதைவிட, நடைபெற்ற சம்பவங்களில் உண்மை இருக்குமானால், அது பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 666, 667 மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

Knowledge of Indian Constitution to School Students

* Q.No. 668— Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Education be pleased to state the steps taken to provide knowledge of the Indian Constitution to the Studens in Schools ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பள்ளிகளில் 5, 6, 8 வகுப்புகளில் வரலாற்றுப்பாட நூல்களில் ''இந்திய அரசியல் அமைப்பு'' பற்றி அனைத்து மாணவர்களுக்கும் போதுமான அளவு விரிவாக கற்றுத்தரப்படுகிறது. மேல் நிலைப்பள்ளிகளில் மாணவர்கள் பயிலக்கூடிய விருப்பப் பாடங்களுள் ஒன்றாகிய ''அரசியலும் தற்கால அரசியலமைப்புகளும்'' என்னும் பாடத்தின் கீழும் இந்திய அரசியல் அமைப்புப் பற்றி விரிவாகப் பயிலலாம்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்திய அரசியல் அமைப்புப்பற்றி மாணவர்களுக்குச் சொல்லித்தருவதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா? அதைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற 'கான்ஸ்டிட்யூஷன் ஆஃப் இந்தியா' என்ற புத்தகத்தை தமிழில் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, இந்த அரசியல் அமைப்பு பற்றிய கருத்துக்களை நாட்டிலுள்ள அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியம். மாணவர்களுக்கு அதுபற்றி விரிவான விளக்கங்கள் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை என்பது உலகம் சொல்லக் கூடிய கருத்து. லைவாணர் ரஷ்யாவுக்குச் செல்லும்போது அவர்களுக்கு